International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 04 Issue: 03 July to September 2022 www.irjtsjournal.org

# அகநானூற்றுப் பாடல்களில் தலைவன் நெஞ்சொடு கிளத்தல்

கு. சகாயராணி,

முனைவர் பட்ட ஆய்வாளர்,

சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி, திருப்பூர்-2

**முகவுரை**

ஒருவர் தம் முன்பாக மற்றொருவர் இருக்கக் கூறுவதனைக் கூற்று வகையில் அடக்கி அங்ஙனம் யாரும் இல்லாமல் தமக்குத் தாமே கூறுவனவற்றை ஒருபாற்கிளவி எனத் தொல்காப்பியர் கூறியுள்ளார் . இவ்வொருபாற் கிளவி தனிக்கிளவி , ஒருபாற்கூற்று. ஒருகூற்றுக்கிளவி எனவும் அழைக்கப்பெறும் . ஒருபாற்கிளவிகளில் கேட்பதற்கு உரியனவற்றுள் ஒன்றாக நெஞ்சம் சுட்டடப்படுகின்றது . ஓதல், பகை, வேந்தற்குற்றுழி, தூது, காவல், பொருள், பரத்தை ஆகிய ஏழன் பிரிவுகளில் பொருள்வயிற்பிரிவு , வேந்தற்குற்றுழிப்பிரிவு, பரத்தையற்பிரிவு ஆகிய பிரிவுகளில் மட்டுமே தலைவன் நெஞ்சத்துடன் பேசுவதாக சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன . பொருள்வயிற்பிரிவில் தலைவன் நெஞ்சொடு கிளத்தல் செய்யும் பாங்கினை உளவியல் நோக்கில் இக்கட்டுரை ஆராய்கின்றது.

**கருதுகோள்**

"சங்க இலக்கி அகநானூற்றுப் பாடல்களில் செலவழுங்கல், இடைச்சுரம், வினைமுற்றி மீளல் ஆகிய பின்புலத்தில் தலைவன் நெஞ்சொடு கிளத்தல் செய்திருக்க வாய்ப்புண்டு "எனும் கருதுகோளின் அடிப்படையில் இக்கட்டுரை தரவுகளை முன்வைக்கின்றது.

**ஆய்வின் எல்லை**

அகநானூற்றில் 3,5,21,24,33,41,43,47,51 ஆகிய 9 பாடல்கள் இவ்வாய்வுக் கட்டுரையின் எல்லையாக அமைகின்றது.

**அக இலக்கியமும் உளவியலும்**

சங்க காலத் தமிழர்கள் அஃறிணை உயிர்களின் இன்பச் செய்கைகளை உயர்திணைக் காதற் கண்ணோடு பார்த்தனர். காதலெண்ணத்தில் ஓர் இழையாகவே இயற்கை ஓடிக் கிடந்தது . தமிழினத்தின் நெஞ்சியல் அல்லது உள்ளியல் அகத்திணைக்குக் கருவை வழங்கிற்று எனவும் , அக்கரு பருத்தும் பெருகியும் பரந்து வளர்வதற்கு வேண்டிய ஊட்டங்களைத் தமிழ் சமுதாயமும் , தமிழ் நிலமும், தமிழ் நிலத்துப் பருவ காலமும் உதவின என்பார் வ .சுப. மாணிக்கனார்.(தமிழ்க்காதல்,பக்.20) அகப் பிறப்பிடம் மனம் என்பதும் , அதில்

பிறக்கும் உணர்ச்சிகளுள் காதல் உணர்ச்சியே மிகச் சிறந்தது என்பதும் , அது மனித குலம் முழுவதற்கும் பொதுவானது என்பதும் இங்கு சுட்டத்தக்கது . காணப்படுகின்றது. அகம், புறம் எனும் இருவகைப் பாடுபொருள்களில் அகம் உணர்ச்சிகளுக்குப் பொதுவானது என்பதால் வாழ்வியலை முன்கடத்தும் கருவியாகவே இதனைக் கருதமுடியும்.

**நெஞ்சியல் அல்லது தனிமனக்கூறு**

தனிமனக்கூறு அதாவது நெஞ்சியல் என்பது இலக்கியப் படைப்புகளில் எவ்வாறு எந்த உருவில் வெளிப்படும்? என்ற வினா முக்கியமானது. இந்த வினாவிற்குத் தொல்காப்பியம் உவமையாக, உருவமாக, உள்ளுறையாக, இறைச்சியாக தனிமனக்கூறு வெளிப்படும் என்று பதிலுரைக்கின்றது.

மனிதனுடைய நோக்கங்கள், நடத்தை, தொன்மை தோற்றுவிக்கும் பாங்கு, படிமங்களைப் பயன்படுத்தும் திறம் ஆகியவை மூலம் இலக்கியத்திற்கும் உளவியலுக்கும் உள்ள உறவைக் காண இயலும் , உள்ளுணர்வைப் பகுத்தாய்வதன் மூலம் மனத்தொடர்பை அறிய வழிவகை ஏற்படுகிறது.

**மன இயக்க நிலைகள்**

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற மருத்துவ மேதை சிக்மண்ட ஃப்ராய்டு மன இயக்கத்தை

1. உள்மனம்
2. இடைமனம்
3. புற மனம்

என மூன்றாகப் பிரித்து விளக்குகிறார் (தி.கு.இரவிச்சந்திரன், சிக்மண்ட் ஃப்ரய்டு உளப்பகுப்பாய்வு அறிவியல், பக்.152)

**உள்மனம்**

உள்மனம்தான் மனிதனின் அன்றாட செயல்களுக்கும், நடத்தைக்களுக்குட் பல பிறருடன் பழகும் சமூக உறவுகளுக்கும் அடிப்படைக் காரணமாக அமைகிறது. புலவி அனுபவங்களும், இன்பம், துன்பம், ஏமாற்றம், மனநிறைவு முதலிய பன்முகப் பரிமாணங்களும் உள்மனம் எனும் கருவறையில் உருவாகின்றன . இவைகளில் ஒடுக்கப்படும் உணர்ச்சிகள் மனதில் புதையுண்டு விடுகின்றன . இவ்வனுபவங்களும் உணர்ச்சிகளும் அவ்வப்போது புற மனதிற்கு எட்டுவதாக உளவியலாளர்கள் கருதுகின்றனர்.

**மனப்போராட்டம்**

மனிதனின் மனம் முடிவெடுக்க முடியாமல் தவிக்கும்போது மனதில் ஏற்படும் இறுக்க நிலையினால் மனப்போராட்டம் நிகழ்கின்றது. மனப்போராட்டம் ஏற்படும் தன்மையைப் பொறுத்து,



© 2022, IRJTSR

1. அணுகுதல்- அணுகுதல் மனப்போராட்டம்
2. விலகுதல்-விலகுதல் மனப்போராட்டம்
3. அணுகுதல்-விலகுதல் மனப்போராட்டம்

ஏன்ற மூன்று நிலைகளில் உளவியலார் வகைப்படுத்துகின்றனர்..

**அணுகுதல் - அணுகுதல் போராட்டம்**

மனிதர் விரும்பும் இரண்டு வித இலக்குகளில் ஒன்றைத் தேர்வு செய்ய வேண்டும் என்ற சு +ழலில் அவர் மனம் முடிவெடுக்க முடியாமல் தடுமாறும் நிலையில் அணுகுதல்-அணுகுதல் போராட்டம் நிகழ்கின்றது.

**விலகுதல் - விலகுதல் போராட்டம்**

மனிதர் விரும்பாத இரண்டு வித இலக்குகளில் ஒன்றைத் தேர்வு செய்ய அவர் மனம் முடிவெடுக்க அதிலிருந்து தப்பிக்க அவர் மனம் தடுமாறுவதே விலகுதல் -விலகுதல் போராட்டம்

**அணுகுதல் - விலகுதல் போராட்டம்**

மனிதர் விரும்பும் ஒர் இலக்கு வெறுக்கக்கூடியதாகவும் , மற்றொன்று விரும்பக்கூடியதாகவும் இருக்கும் சு+ழலில் வெறுக்கவா ? விரும்பவா எனத் தவிப்பது அணுகுதல் - விலகுதல் போராட்டம் எனச் சுட்டப்படுகின்றது.

**நெஞ்சொடு கிளத்தல்**

**"நோயும் இன்பமும் இருவகை நிலையிற்**
**காமங் கண்ணிய மரபிடைத் தெரிய**
**எட்டன் பகுதியம் விளங்க ஒட்டிய**
**உறுப்புடையது போல் உணர்வுடையது போல்**
**மறுத்துரைப்பது போல் நெஞ்சொடு புணர்த்துஞ்**
**---------------- (தொல்.பொருள், நூற்.194)**

எனும் நூற்பாவில் தொல்காப்பியர் நெஞ்சொடு புணர்தல் கூற்றானது மெய்ப்பரிவு எட்டாகிய எட்டன் பகுதியும் விளங்கப் பொருந்திய உறுப்புடையது போலவும் , உணர்வுடையது போலவும் , மறுத்துரைத்தல் போலவும் ஒத்த அன்புமிக்க தலைவன் , தலைவியராகிய காதலர் இருவர் பால் மட்டும் நிகழ்தற்குரியது என்கிறார்.

பொருள்வயிற் பிரிந்து செல்லும் தலைன் , தலைவியின் நிலையை எண்ணிப் பலவாறாக தன் நெஞ்சிடத்துப் பேசிக் கொள்வதாக சங்க இலக்கியத்தில் பல பாடல்கள் அமையப்பெற்றுள்ளன. நெஞ்சொடு

கிளத்தல் என்பது மனஒலி என்று அழைக்கப்படுகின்றது . அதாவது தனக்குத்தானே பேசித் தெளிவாகுதல் என்று பொருள் கொள்ளப்படுகின்றது.

**பொருள்வயிற் பிரிவு**

தலைவன், தலைவியைப் பிரிந்து செல்லுதலும் (கலத்தில் பிரிவு ), தலைவியை உடன் அழைத்துக் கொண்டு உறவினர்களைப் பிரிந்து செல்லுதலும் (காலிற் பிரிவு ) ஆகிய இருவகைப் பிரிவுகள் பாலைத் திணைக்குரிய உரிப்பொருளாகும். இதனை,

**இருவகைப் பிரிவும் நிலைபெறத் தோன்றலும்**
**உரியதாகும் என்மனார் புலவர் (தொல்.அகத்.நூற்.13)**

ஏனத் தொல்காப்பியம் புலனாக்குகின்றது. மேலும், இதில் கலத்தில் பிரிவு தலைமகளுடன் இல்லை என்பதனை, முந்நீர் வழக்கம் மகடூஉ வோடு இல்லை (தொல். அகத்.37) என்ற நூற்பா விளக்குகிறது.

தலைவன், தலைவியோடு உடனிருந்து துய்க்கும் இன்பியல் வாழ்க்கை ஆண்டுக் கணக்காக நீடித்தற்கில்லை. கடமைகளைச் செய்து குடும்பம் நடத்துதற்குப் பொருள் வேண்டும் . அதனை வேற்றூர் சென்றும், வேற்று நாடு சென்றும் ஈட்டுதற்குத் தலைவியைப் பிரிவான் தலைவன் . இப்பிரிவு இன்றியமையாத உலகியல் அறமாகும். இன்பவுணர்வு பெண்ணைக் காட்டிலும் ஆணுக்கு அதிகம் என்பர் உயிர் நூலார். எனினும் சமுதாயத்தில் ஆடவனுக்கு வகுக்கப்பட்டுள்ள புறக்கடமைகளும் , புகழுணர்ச்சியும் அவனது இன்ப நாடியை மெலிதாக்குகின்றது. இதனை,

**"பெருமையும் உரனும் ஆடூஉமேன" (தொல்.1043)**

ஏன்ற தொல்காப்பியம் நூற்பா உறுதிப்படுத்துகின்றது. பெருமை நோக்கமும், மனத்திட்பமும் ஆண்பாலுக்கு உரிய பண்புகள் என்று தொல்காப்பியர் சுட்டுவார். ஆதலின் நீடிய காமத்தில் அழுந்திக் கடமை குறைதலும், வறுமைப்படுதலும் தலைவனுக்கு உளவாகா . பொருளாவது கடமையை எளிமைப்படுத்தும் கருவி ஆகும் . இக்கருவியை ஈட்டுவதற்குத் தலைவன் , தலைவியை விட்டுப் பிரிவான் . பொருள்வயிற் பிரிவு என்னும் இத்துறை சங்கப் புலவர்களின் நெஞ்சை அள்ளிய துறைகளுள் ஒன்று ஆகும் . இன்பமும், கடமையும் போராடும் இடமாக நல்ல உணர்ச்சிகள் மோதிக்கொள்ளும் இடமாகவும் களவிற்கும் கற்பிற்கும் பொதுவாகவும் இத்துறை அமைந்திருப்பக் காணலாம்.

**செலவழுங்கல்**

**செலவிடையழுங்கல் செல்லாமை யன்றே**
**வன்புறை குறித்த தவிர்ச்சியாகும் (தொல்.பொருள். நூற்.1130)**

என்ற தொல்காப்பியம் நூற்பா நம் முன்னோர்களின் உளவியலறிவுக்குச் சிறந்த சான்றாகும் . அறிவுடைக் குடும்பத்தில் காதலும் , கடமையும் மோதிக் கொள்ளாமல் ஒத்துச் செல்லும் என்பதை செலவழுங்கற் பாடல்களால் அறிந்து கொள்ள முடிகின்றது

**செலவழுங்கலில் தலைவன் நெஞ்சொடு கிளத்தல்**

துன்பத்தில் தோன்றும் இன்பம் , இன்பத்தில் தோன்றும் இன்பத்தினும் இனிமை மிக்கது என்று ஆங்கிலப் புலவர் செல்லி "கவிதைக் காப்பு "என்னும்நூலில் இலக்கியச் சுவையின் நுண்ணிய மனப்பாங்கினை விளக்க முயல்வார் . இம்மனத்திறனை நிலைக்களனாகக் கொண்டு எழுந்தவைகளே பாலைத்திணைப்பாடல்கள் தலைவன் பிரிவிலும் , தலைவியின் அவலத்திலும் நாம் இலக்கிய வரத்தையும , இன்ப நயத்தையும் காணமுடிகின்றது.

**"அருங்கலி முதலை மோந்தோல் அன்ன........"(அகம். 3)**

இப்பாடல் வினைமேற் செல்லத் தூண்டும் தம் நெஞ்சிற்குத் தலைவன் கூறும் காரணங்களை விளக்குவதாக அமைந்துள்ளது . முருக்கம் பு +வின் இதழ்கள் போலக் காண்பதற்கு இனிய சிவந்த வாயிதழ்களையும், அழகிய இனிக்கின்ற பேச்சினையும் , தெரிந்தெடுத்த ஆபரணங்கள் அணிந்த சிறப்பினையும் உடைய தலைவியின் வளைந்த காதணிகளுடன் பொருந்துகின்ற கண்களின் பார்வையானது நெடுந் ; தொலைவிலேயுள்ள பாலை வழி இடத்தும் வினைமேற் செல்லவிடாது எனத் தலைவன் கூறுகிறான்.

**"அளிநிலை பொறது அமரிய....." (அகம். 5)**

அதாவது தலைவியின் மாறுபட்ட முகத்தோற்றமும் , தாம் அழைத்த காலத்தும் அதனைக் கேளாதவள் போலிருந்ததும், நிலத்தினை வடுப்படுத்துமாறு நடந்த சிவந்த பாதங்களும் , வாடிய உள்ளத்தில் எழுந்த வாய்மையற்ற போலிப்புன்னகையும் தலைவனை பிரிந்து செல்லவிடாமல் தடுப்பதாக இப்பாடலின் கருத்துகள் அமைந்துள்ளன.

**இடைவழிச் சுரத்தில் தலைவன் நெஞ்சொடு கிளத்தல்**

பொருளாசை மீதூற முன்னர் ஒரு முறை தொலைநாடு நோக்கிச் சென்றான் . தலைவன் உள்ளத்தே மிக்கெழுந்து செல்லத்தூண்டிய அந்த ஆர்வம் நெடுங்காலத்து , தலைவன் உள்ளத்தில் நிலைபெறவில்லை , இடைவழியிலேயே அந்த நினைவு ஒழிய , தலைவியின் நினைவே மிகவும் அதிகமாயிற்று . அப்போது தலைவன் தன் நெஞ்சிற்குச் சொல்லியதாக இப்பாடல் அகநானூற்றின் 21-ஆம் பாடல் அமைந்துள்ளது.

**"மனை இள நொச்சி......" (அகம். 21)**

என்ற பாடலில் வீட்டுத் தோட்டத்து இளைய நொச்சி மரத்திலேயுள்ள முல்லையின்கண் அரும்பியிருக்கின்ற வண்டினம் விரும்பும் வெண்மையான முல்லையரும்புகளை ஒத்தனவாக நிறைத்து வைத்தாற் போன்ற வெண்மையான பல் வரிசையினை உடையவள் , அழகியதாக அமைந்த வயிற்றினள் , அகன்ற அல்குல் தேரினையு உடையவள் , ஒப்பனை செய்யப் பெற்றுத் தாழ்ந்து தொங்கும் மென்மையான கூந்தலினை உடையவள் தலைவி ஆவாள் . இத்தகைய தன் தலைவியின் மாண்புற்ற நலன்கள் எல்லாம் வாடுமாறு

தொலைவிலேயுள்ள நாட்டினை நோக்கிச் செல்ல வேண்டாம் என்று அவனுடைய நெஞ்சம் அன்று சொல்லியும், தலைவியின் உள்ளம் இன்புறும்படியாகப் பல்வேறு செல்வங்களையும் ஈட்டிக் கொணர்ந்து தருவோம் என்று மனம் தூண்டியதால் தலைவியை பிரிந்தோம் எனத் தலைவன் தன் நெஞ்சொடு கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

**"வினை நன்றாதல் வெறுப்பக் காட்டி...... (அகம். 33)**

அதாவது, பொருள் ஈட்டிக் கொணருகின்ற காரியமானது எத்துணை நன்மை தருவது என்பதைத் தன் உள்ளம் எடுத்துக் கூறியதால் தான் குன்றுகள் பலவற்றையும் கடந்து வந்ததாகவும் , தலைவியின் நினைவுகளினால் தன் நெஞ்சமே தன்னை கைவிட்டுப் போனதைப் போல தான் துணையற்றவனாக இருப்பதாகவும் நினைத்து தலைவன் வருந்துவதாக இப்பாடல் கருத்து அமைந்துள்ளது.

**வினைமுற்றி மீளலில் தலைவன் நெஞ்சொடு கிளத்தல்**

வினைமேற் சென்ற தலைவன் , இடைவழியில் தன் தலைவியை நினைத்து தளர்ந்த போது , வினையினை முடித்து வீடு திரும்ப வேண்டும் என்ற ஊக்கம் மிகுந்த நெஞ்சம் கொண்டவனாக இருப்பதை

**"அழியல் உள்ளம் வழிவழிச் சிறப்ப....... (அகம். 47)**

என்ற பாடலடிகள் சுட்டுகின்றன . இழைகளணிந்த நெடுந்தேரினையும் , கைவண்மையினையும் உடைய செழியனது மேகங்கள் தவழ்ந்து கொண்டிருக்கும் வளங்கெழுமிய சிறுமலை என்னும் மலையிலே கூதளஞ்செடி கமழுகிற வெற்பினிடத்திலே வாழும் தலைவியின் தோளில் படர்ந்திருக்கும் பசலை நீங்குமாறு தாம் தழுவி மகிழ்வோம் என்று தன் நெஞ்சத்திடம் தலைவன் கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது . களிறு, பிடியானை, புறாசேவல், பெடை ஆகியவற்றின் அன்பினைக் கண்ட தலைவனின் மனத்திலும் அன்புணர்வு பெருகித் தலைவியை நினைத்து மீள்வான் என்னும் கருத்தினை அகநானூறு 43, 47 -ஆம் பாடல்கள் விளக்குவதாக அமைகின்றன.

**அக இலக்கியம் எடுத்துரைக்கும் உத்திகள்**

அகத்திணையியலில் முதன்முதலாகப் பிரிவின்கண் கூற்று வகைகளைக் கூறிவந்த தொல்காப்பியர் , அக்கூற்றில் பயன்படும் உள்ளுறை உவமத்தை விளக்குகிறார் . உள்ளுறையுவமம் என்பது தமிழ் இலக்கியத்திற்கு உரிய தனி நெறி . இவ்வுவமம் மிக வரம்பான இலக்கணம் உடையது . அகப்பொருளாம் ஐந்திணைக் கண்ணேதான் ஆளுதற்குரியது . கருப்பொருள் என்னும் இயற்கைச் சு +ழலிலிருந்து புனையப்படுவது. வெளிப்பார்வைக்குச் செடி , கொடி, மரம், பறவை, விலங்குகளின் செயல்களைப் புனைவது போற் காணப்படுவது. இறைச்சி என்பது கருப்பொருள்களின் ஒரு பகுதியாகிய மான், ஆடு, மாடு முதலிய விலங்குகளையும், பறவைகளையும் பெரும்பகுதி குறிக்கும். தலைவியின் உடலில் மாமை நிறத்தில் உள்ள சிறுசிறு தேமற் புள்ளிகள் பு +ங்கொத்துகளில் உள்ள தாதுவுடன் கூடிய தேன் துளிகள் போன்று இருப்பதாக அகநானூறு 41 ஆம் பாடல் அமைந்துள்ளது. தலைவன் பொருள் தேடுவதை கைவிட்டதற்கான

காரணம் பிடியானை , களிறு இவற்றின் செயல்களே என்பதை அகநானூறு 43 ஆம் பாடல் வழி காணமுடிகின்றது.

**தொகுப்புரை**

சமூகம் மனிதனின் பண்பாட்டு உணர்ச்சிக்கும் , உடலியல் மனிதனின் பாலுணர்ச்சிக்கும் மூலங்களாக இருக்கின்றன . இவ்விரண்டினுள் எதையும் விட்டுக் கொடுக்காத மனநிலையும் , அதே வேளையில் முழுமையாகச் சார்ந்திருக்க முடியாத இக்கட்டான மனநிலையும் உடையவனாகத் தலைவன் காணப்படுகிறான் என்பதைப் பாலைப் பாடல்களின் வழி அறிந்துகொள்ள முடிகின்றது.

பொருள்வேட்கையினால் தலைவியைப் பிரிந்துச் சென்ற தலைவனின் உள்ளத்தில் ஏற்படும் போராட்ட மனநிலையைச் சமன் செய்வதற்கு உதவுவது தலைவனின் நெஞ்சம் மட்டுமே என்பதைச் சங்கப் புலவர்களின் படைப்புகளின் வழியாக அறிந்து கொள்ள முடிகின்றது.

கலையாக்கத்துக்கும், அனுபவத்துக்கும் புலன் ஆற்றல்களை விட உருவக்காட்சி ஆற்றலே மிகவும் இன்றியமையாதது என்பதனை பாலைப் பாடல்கள் அறிவுறுத்துகின்றன.

சங்கப்புலவர்கள் அகத்திணைக் கல்வியையும் , இயற்கைக் கல்வியையும் ஒருங்கே பெற்றிருந்தனர் என்பதனை அகநானூற்றுப் பாடல்களின் வழியாக அறிந்து கொள்ள முடிகின்றது.

விலங்குகள் மற்றும் பறவைகளின் செய்கைகளிடையே தலைவன் , தனது தலைவியின் நினைவுகளைக் காண முயல்வதைப் புலவர்கள் எடுத்துரைக்கும் பாங்கு அனுபவங்களை வாயால் வருணிக்கவோ, உள்முகப் பார்வையால் பாகுபடுத்திப் பார்க்கவோ முடியாது என்பதைப் புலப்படுத்துவதாகவே அமைந்திருக்கின்றது.

**துணைநூற் பட்டியல்**

1. க. முருகேசன், "தனி மனித உளவியல்"

2. கதிர். மகாதேவன் "காமத்துப்பாலும், உளவியலும்"பொதிகை

3. ச. சாம்பசிவன் "தொல்காப்பியமும், உளவியலும்"பொதிகை

4. தமிழண்ணல் "சங்க இலக்கிய ஒப்பீடு"மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.
பக்.72,76

5.வ. சுப. மாணிக்கனார் "தமிழ்க்காதல்"மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.
(பக்.20, பக்.94, பக்.96)

**இணைய தளங்கள்**

1. Siragu.com
2. . tamilauthors.com/01/580.hml
3. . TVA-Book-0010959